**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.145/19**

2024-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 -ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.முருகன், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், இளநிலை உதவியாளர், என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.முருகன், |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த/பெ.பூங்காவனம் |
| கிராமம் | - கீழ்மட்டை |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

26.04.2024
**பி.சா.1.**

நான் இவ்வழக்கில் 9ம் பிரதிவாதி. ஏனைய பிரதிவாதிகளுக்காக பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன். செய்யாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்ற அசல் வழக்கு எண்.191/2018 தாவாவில் பிராது சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். ( **அசல் வழக்கு எண்.191/2018 பிராது நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) செய்யாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்ற அசல் வழக்கு எண்.191/2018 தாவாவில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். ( **அசல் வழக்கு எண்.191/2018 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) மேற்படி வழக்கில்

பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை தாக்கல் செய்துள்ளேன் ( **அசல் வழக்கு எண்.191/2018 தீர்ப்புரை நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ( **அசல் வழக்கு எண்.191/2018 தீர்ப்பாணை நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா சொத்து குறித்த சிட்டா மற்றும் வீட்டு வரி ரசீதுகள் மின் கட்டண அட்டை தாக்கல் செய்துள்ளேன். ( **நத்தம் நிலவரி திட்ட பட்டா எண்.89 தூய சிட்டா நீதிமன்ற சான்று நகல் பி.வா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ( **நத்தம் நிலவரி திட்ட பட்டா எண்.159 தூய சிட்டா நீதிமன்ற சான்று நகல் பி.வா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ( **நத்தம் நிலவரி திட்ட பட்டா எண்.162 தூய சிட்டா நீதிமன்ற சான்று நகல் பி.வா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது) பூங்காவனம் என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ள வரி ரசீது நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது) பூங்காவனம் என்பவர் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை நீதிமன்ற சான்று நகல் பி.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னுடைய பிரமாணத்தை ஏற்று வாதிகளின் தாவாவை பிரதிவாதிகளின் செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு பிரார்த்திக்கிறேன்.

கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.